மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, All the ex-Hindi Pandits of Coimbatore and Nilgiris have since been paid their special pay. என்று கூறப் பட்டிருக்கிறது. ஆகவே எல்லோருக்குமே அந்தப் பத்து ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. முதலில் செகண்டரி ஸ்கூல்களில் வேலை செய்கிற கிராப்ட் டீச்சர்களுக்குக் கொடுக்கப் பட்டது. உயர் துவக்கப் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர் களுக்குக் கொடுக்கப்படாமல் இருந்தது. அவர்களுக்குக் கொடுக்கப் பட வேண்டுமென்ற முறை மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கும் கொடுக்கப்பட்டது.

Drawing Master.

* 125 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether a fully qualified Drawing Master serving in a High School, who has acquired a B.A. Degree, is eligible for incentive payment for possession of higher qualifications; and

(*b*) if so, the details thereof?

ஓவிய ஆசிரியர்.

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளியில் பணி புரியும் முழுக் கல்வித் தகுதி பெற்ற ஓவிய ஆசிரியர் ஒருவர், பி.ஏ. பட்டம் பெற்றிருந்தால், உயர் கல்வித் தகுதி பெற்றிருப்பதற்காக ஊக்க ஊதியம் பெறத் தகுதி யுடையவராவாரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ). பி.டி. அல்லது பி. எட். பட்டம் பெற்றால் மட்டுமே ஓவிய ஆசிரியர் போன்ற சிறப்புப் பாட ஆசிரியருக்கு ஊக்க ஊதிய உயர்வு கொடுக் கப்படுகிறது. பி.ஏ. மட்டும் தேர்ச்சி பெற்றால் ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்படுவதில்லை.